20.01.2026

O.S.No. 176/2024

PW3– பண்டாரம் – த/பெ. அருணாசல நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.01.2026

குறுக்கு விசாரணை : ( வாதி /பிரதிவாதி தரப்பில்)

1. நான் கோவிலில் தீபம் போடும் வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான். 1ம் வாதி கோவில் பூசாரி என்றால் சரிதான். 1ம் வாதிக்கும், எனக்கும் சிறுவயதிலிருந்தே பழக்கம். அவர் எனதுநெருங்கிய நண்பர் என்றால் சரிதான். அவர் வேலைக்கு செல்லும்போது என்னையும் அழைத்துசெல்வார் என்றால் சரிதான். சம்பளமும் தருவார் என்றால் சரிதான். 1ம் வாதி தாலுகா அலுலவகத்தில் மனு எழுதிக்கொடுப்பார் என்றால் சரிதான். பழக்கத்திற்காக அவருடன் இருப்பேன் என்றால் சரிதான்.

2. எனக்கு வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியும். என் வீட்டு சர்வே எண் தெரியாது. தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் ½ கி.மீ தொலைவு இருக்கும். நான் ஊரிலும், சமுதாயத்திலும் எந்த பொறுப்பிலும் இல்லை என்றால் சரிதான். பிரிவினை பற்றிய விவரம் 1ம் வாதி எனக்கு சொல்லவில்லை. எனக்கு ஆனையப்பபிள்ளை, குத்தாலிங்கப்பிள்ளையை தெரியாது. அவர்களுக்கு தபசில்சொத்து பாத்தியமா என்றும் எனக்கு தெரியாது. நான் தபசில் சொத்தை அளந்து பார்த்ததில்லை என்றால் சரிதான்.

3. சுப்பிரமணிய நாடார் யார் என்று எனக்கு தெரியாது. சாமியாடி நாடாரை தெரியும். சாமியாடி நாடாருக்கு காளிமுத்து நாடார் என்ற மகன் உண்டு. காளிமுத்து நாடார் தற்போது உயிருடன் இல்லை. காளிமுத்து நாடாருக்கு மொத்தம் எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது.

4. 1ம் வாதியின் தந்தை பெயர்பூசைபெருமாள். பூசைபெருமாளுடன் உடன்பிறந்தவர்கள் சங்கர், குணம் ஆகியோர் ஆவார்கள், அவர்களை தவிர வேறு உடன்பிறந்தவர்கள் கிடையாது. அவர்கள் ஊரில் தான் வசிக்கிறார்கள். அவர்களை விசாரித்தால் தபசில் சொத்து பிரிக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் வாதி குடும்பத்திற்கு உறவினர் கிடையாது என்றால் சரிதான்.

5. சங்கருக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. சங்கருக்கு எவ்வளவு சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. குணத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. சாமிக்கண்ணு நாடாரை தெரியும். சாமிக்கண்ணுநாடாரின் மகள் பெயர் செல்வி என்றால் சரிதான். செல்வியின் மகன் தான் வெற்றிவேல் முருகன் என்றால் சரிதான். வெற்றிவேல் , சித்திரைக்கனிக்கு சொத்துக்களை கொடுத்துவிட்டாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. சொத்துக்களின் அனுபவம் பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யார் யார் எவ்வளவு விஸ்தீரணம் வைத்திருந்தார் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

6. சொத்துக்கள் சம்பந்தமாக எந்ததேதியில், எந்தமாதத்தில், எந்த வருடத்தில் யார் முன்னிலையில் பிரிவினை நடந்தது என நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரிவினை பற்றி நேரடியாக தெரியாத காரணத்தினால் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் கொடுக்கப்பட்டவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முதல்விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்களை நான்தான் சொன்னேன்.

7. 1ம் வாதி தாலுகா அலுவலகத்தில் ஊர்மக்களுக்கு பட்டாவிற்கான விண்ணப்பிக்கும் மனு எழுதிக்கொடுப்பார் என்றால் சரிதான். சொத்துக்கள் சம்பந்தமாக முறையாக பட்டா வழங்கப்பட்டவிவரம் தெரியும் என்றால் சரிதான். புல எண்.87/1 ஆனது மேல்பக்கம் புல எண்.87/1ஏ, கீழ்பக்கம் புல எண்.87/1பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 87/1ஏ நிலத்தையும், 87/1பி நிலத்தையும் பிரிக்க வேலி உள்ளது என்றால் சரிதான்.

8. வேலிக்கு மேற்கேயுள்ள இடத்தை காளிமுத்துவகையறா அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். வேலிக்கு கிழக்கேயுள்ள இடத்தை வாதி வகையறா அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். வேலிக்கு மேற்கே செங்கமால், கோழிப்பண்னை உள்ளது என்றால் சரிதான். அதை பிரதிவாதி வகையறாக்கள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். வேலிக்குமேற்கே வாதி செல்லமுயற்சித்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். காளிமுத்து நாடார் காலத்திலோ, பூசைப்பெருமாள் நாடார்காலத்திலோ சொத்தில் பிரச்சனை இல்லை

என்றால் சரிதான். பட்டாப்படி அவரவர் சொத்தைஅனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரிதான். வாதி எனது நெருங்கிய நண்பர் என்பதால் வாதி சொன்னதன் அடிப்படையில் முதல்விசாரணை வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி